## டெல்லியில் பரிதாபம்:

# வெப்ப அலைக்கு ஒரே நாளில் 17 பேர் சாவு

புதுடெல்லி, ஜூன்.21-
டெல்லியில் வெப்ப அலைக்கு ஒரே நாளில் 17 பேர் பலியானார்கள்.

### வெப்பவாதம்

தலைநகர் டெல்லியில் கோடை வெப்பம், கொழுந்து விட்டு எரிவது போல இருக்கிறது. இந்த கோடை காலத்தில் சில இடங்களில் அதிக பட்சமாக 120 டிகிரிக்கும் மேல் வெப்பநிலை சென்றிருக்கிறது. இரவில் கூட 100 டிகிரி அளவில் வெப்பத்தன்மை உள்ளது. இதனால் மக்கள் சிரமப்படுகிறார்கள்.

கான்கிரீட் வீடுகளில் இருப்பவர்கள் மின்விசிறி, ஏர் கூலர் மற்றும் ஏ.சி.க்களை பயன்படுத்தி ஓரளவு தப்பிக்கிறார்கள். ஆனால் வெளியே சாலையோரங்களில் வசிக்கும் மக்களின் நிலை பரிதாபமாக உள்ளது.

இடைவிடாது தொடர்ந்து வாட்டும் இந்த வெப்பத்தால் பலருக்கு வெப்பவாதம், காய்ச்சல் உள்ளிட்ட வெப்பம் தொடர்பான நோய்கள் ஏற்படுகின்றன.

குறிப்பாக முதியவர்கள் உடலில் நீர்ச்சத்து குறைந்து மயக்கம் அடையும் நிலைக்கு சென்று விடுகிறார்கள். இதனால் டெல்லி ஆஸ்பத்திரிகளில் வெப்ப பாதிப்பு சிகிச்சைக்கு சேர்க்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது. இவர்களில் பலர் இறந்துள்ளனர்.

### 192 பேர்

இதற்கிடையே தனியார் தொண்டு நிறுவனம் நடத்திய ஆய்வில் கடந்த 11-ந்தேதி முதல் 19-ந் தேதி வரையிலான காலக்கட்டத்தில் டெல்லியில் 192 பேர் வெப்ப நோய்க்கு இறந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. இது அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்படவில்லை.

இதற்கிடையே வெப்ப நோய்க்கு சிகிச்சை பெற்று வருபவர்களை டெல்லி சுகாதாரத்துறை மந்திரி சவுரப் பர்த்வாஜ் நேற்று காலை பார்வையிட்டார்.

### 24 மணி நேரத்தில் 17 பேர்

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெப்பம் நிலவுகிறது. கடந்த 48 மணி நேரத்தில் (நேற்று காலை நிலவரப்படி) 380 பேர் அரசு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். அதில் 14 பேர் இறந்துள்ளனர்.

பல இடங்களில் இறந்தவர்களின் உடல்கள் போலீசாரால் மீட்கப்பட்டு உள்ளன. அவர்கள் வெப்பநோய்க்கு இறந்தார்களா? என்பது பற்றி கண்டறியப்பட வேண்டும்" என்றார்.

இதற்கிடையே நேற்று மாலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 17 இறப்புகள் பதிவானதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் வந்தன. இவர்களில் 13 பேர் சப்தர்ஜங் ஆஸ்பத்திரியிலும், 4 பேர் ஆர்.எம்.எல். ஆஸ்பத்திரியிலும் உயிரிழந்து உள்ளனர்.

### ஒரே நாளில் 142 உடல்கள்

இப்படி இறப்புகள் அதிகரித்து உள்ளதால் டெல்லியில் உள்ள சுடுகாடுகளில் தகனங்களும் அதிகரித்து உள்ளன. டெல்லி செங்கோட்டையின் பின்புறம் உள்ள நிகம்போத் சுடுகாட்டுக்கு நேற்று முன்தினம் மட்டும் 142 உடல்கள் கொண்டு செல்லப்பட்டு உள்ளன. இங்கு வழக்கமாக தினசரி 50 முதல் 60 உடல்கள் வரை வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவை அனைத்தும் வெப்ப நோய் பாதிப்புக்குள்ளானவை என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. வேறு காரணங்களாகவும் இருக்கலாம் என கூறப்படுகிறது.

இதற்கிடையே, வெப்ப அலையால் பாதிக்கப்படுபவர்களுக்காக டெல்லியில் உள்ள அனைத்து அரசு ஆஸ்பத்திரிகளிலும் சிறப்பு சிகிச்சைப் பிரிவை தொடங்க மத்திய சுகாதாரத்துறை மந்திரி ஜே.பி.நட்டா உத்தரவிட்டு இருந்தார். அதன் அடிப்படையில் சிறப்பு சிகிச்சை பிரிவுகள் தொடங்கப்பட்டு வருகின்றன.

தினத்தந்தி தேதி: 21.06.2024.